# பிரபலமானவர்களின் பெயர்களை பயன்படுத்துவதில் ஜோ லோ திறமையானவர்

## முன்னாள் வங்கி அதிகாரி சாட்சியம்



கோலாலம்பூர், டிச. 14-

ஜோ லோ என பிரபலமாக அறியப்படும் லோ டேக் ஜோ கூட்டங்களில் தாமதமாக கலந்து கொள்வதாலும் கடன்களை காலதாமதமாக திரும்ப செலுத்துவதாலும் அல்லது ஒரு போதும் செலுத்தாமல் இருப்பதாலும் நினைவில் நிலையான இடத்தை பிடிப்பதுடன், பிரபலமானவர்களின் பெயர்களை பயன்படுத்துவதிலும் வல்லவர் என்று உயர் நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

முன்னாள் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் ரசாக்கின் 1 எம்.டி.பி. வழக்கில் நேற்று எதிர்தரப்பு வழக்கறிஞர் டான்ஸ்ரீ முகமட் ஷாஃபி அப்துல்லாவால் நடத்தப்பட்ட குறுக்கு விசாரணையின் போது முன்னாள் வங்கி அதிகாரி ஜோன்னா யு கின் பிங்கினால் ஜோ லோவின் பண்புகள் சுருக்கமாக பட்டியலிடப்பட்டன.

கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து ஜோ லோவுக்கு அறிமுகமான யு, ஜோ லோவால் பயன்படுத்தப்பட்ட பெயர்களில் மத்திய நாடுகளைச் சேர்ந்த மிக பிரபலமானவர்கள் பலரும்



அடங்குவர் என்றும் ஜோர்டான் ராணி ரனியாவும் இவர்களில் ஒருவர் என்றும் கூறினார்.

குவைத்தைச் சேர்ந்த அல்லது இங்கும் அங்கும் உள்ள பிரபலமானவர்களை சந்திக்க போவதாக அவர் கூறுவார். ஆனால் நான் கண்டு கொள்வதில்லை என்றார் யு.

அவர் ராணி ரனியாவை பற்றியும் குறிப்பிடுவார். தங்களுடைய சந்திப்புகளை பற்றியும் தாங்கள் ஒன்றாக மேற்கொண்ட பயணங்களைப் பற்றியும் அவர் கூறுவார் என்று யு தெரிவித்தார்.

ஜோ லோவின் தற்பெருமைகளைப் பற்றிய செய்திகளையும் நான் படித்திருக்கிறேன். வார்ட்டன் பிசினஸ் ஸ்கூல் பட்டதாரி என்ற தற்பெருமையும் இதில் அடங்கும் என்று யு சாட்சியளித்தார்.

எனினும், ஐவிலீக் பள்ளியிலிருந்து இடையிலேயே வெளியேறியவர் ஜோ லோ என்பது உங்களுக்கு தெரியுமா என ஷாஃபி வினவியதற்கு தெரியாது என்றார் யு.

# போதைப் பொருள் வைத்திருந்த சிங்கப்பூரியருக்கு 31 ஆண்டு சிறைத்தண்டனை

## முன்னதாக விதிக்கப்பட்ட மரணதண்டனையிலிருந்து தப்பினார்

புத்ராஜெயா, டிச. 14-

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஜொகூர்பாருவில் ஓர் அடுக்குமாடி வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்த இரண்டு குற்றச் சாட்டுகளை ஒப்புக்கொண்ட ஒரு சிங்கப்பூரியருக்கு நேற்று மேல் முறையீட்டு நீதிமன்றம் 31 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது.

விசாரணை நீதிபதி தம்மை தவறாக வழிநடத்திச் சென்றிருப்பதை மேல்முறை யீட்டு நீதிமன்றம் கண்டறிந் ததை தொடர்ந்து, சிங்கப் பூரில் ஒரு கோப்பிக்கடை பணியாளராக வேலை செய்து வந்த டான் கீ சென்னுக்கு (வயது 62) விதிக்கப்பட்டிருந்த குற்றத் தீர்ப்பும் மரண தண்டனையும் ரத்து செய்யப் பட்டன.

வாய்மொழி தீர்ப்பை வழங்கிய நீதிபதி ஹாஷிம் ஹம்ஸா, டான் தற்காப்பு வாதம் புரிய உத்தரவிட்ட போது, அவர் உண்மை யிலேயே போதைப்பொருளை வைத்திருந் தாரா அல்லது அதனை வைத் திருந்ததாக அனுமானிக்கப்படு கிறாரா என்பதை குறிப்பிட விசாரணை நீதிபதி தவறிவிட்டார் என்றார்.

டான் சார்பில் ஆஜராக நீதிமன் றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் அப்துல் காடிரும் அரசுதரப்பு துணை வழக்கறிஞர் வோங் போய் யோக்கும் சமர்ப்பித்த வாதத் தொகுப்புகளை மூவரடங்கிய அமர்வு இதற்கு முன்னர் செவிமடுத்தது.

ஹாஷிமுடன் அமர்வின் தலைவர் நீதிபதி கமாலுடின் சாயிட்டும் நீதிபதி நோர்டின் ஹசானும் அமர்வில் இடம்பெற்றி ருந்தனர்.


கடந்த 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி நண்பகல் 12.45 மணியளவில் ஒரு மேலேண்ட் ஆஸ்டின் அடுக்குமாடி வீட்டில் 4 கிலோ மெத்தபெத்தமின் போதைப் பொருளைகடத்தியதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஜொகூர்பாரு உயர்நீதிமன்றம் குற்றவாளி என தீர்ப்பளித்தது.

அதே இடத்தில் அதே சமயத்தில் 243 கிராம் மெத்தி லெனிடாக்சி என்ற போதைப் பொருளை வைத்திருந்த தற்காகவும் அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டார்.

டானுக்கு முதலாவது குற்றத் திற்கு 16 ஆண்டு சிறைத் தண்டனையையும் இரண்டாவது குற்றத்திற்கு 15 ஆண்டு சிறைத் தண்ட னையையும் விதித்த கமாலு டின், ஏக காலத்தில் அனு பவிக்கும்படி உத்தரவிட்டார்.

எனவே, டான் தாம் கைது செய்யப்பட்ட 2016 செப்டம்பர் 15ஆம் தேதியிலிருந்து 16 ஆண்டு களுக்கு இத்தண்டனையை அனுபவிப்பார்.

# ஷாரிர் சமாட்டின் வழக்கில் நஜீப் டிச. 22இல் சாட்சியமளிப்பார்



கோலாலம்பூர், டிச. 14-

முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் ரசாக் கிடம் இருந்து பெற்றதாக கூறப்படும் 10 லட்சம் வெள்ளியை தெரியப் படுத்தத் தவறிய குற்றச் சாட்டுகளை எதிர்நோக்கியி ருக்கும் டான்ஸ்ரீ ஷாரிர் அப்துல் சமாட்டின் வழக்கில் நஜீப் அரசுதரப்பு சாட்சியாக டிசம்பர் 22ஆம் தேதி சாட்சியமளிக்கவிருக் கிறார்.

1எம்.டி.பி. வழக்கில் இப் போது விசாரணை செய்யப்பட்டு வரும் நஜீப், டிசம்பர் 22ஆம் தேதிதான் சாட்சியமளிக்க வர முடியும் என அரசுதரப்பு துணை வழக்கறிஞர் ரஷிடா முர்னி அஸ்மி நீதிமன்றத் திடம் தெரிவித் ததை தொடர்ந்து உயர்நீதி மன்ற நீதிபதி டத்தோ முகமட் ஜமில் ஹுசேன் இந்த தேதியை நிர்ணயித்தார்.

அரசுதரப்பு அடுத்த சாட்சியான எம்.ஏ.சி.சி. விசாரணை அதிகாரியை இன்று அழைக்கலாம் என்றும் நஜீப் டிசம்பர் 22ஆம் தேதி சாட்சியமளிக்க முடியும் என்றும் நீதிபதி கூறினார்.

2018 நவம்பர் 27ஆம் தேதி யிடப்பட்ட ஓர் ஆம் இஸ்லாமிக் பேங் பெர்ஹாட் காசோலை மூலம் நஜீப்பிடம் இருந்து பெறப்பட்ட 10 லட்சம் வெள்ளியை உள் நாட்டு வருமானவரி வாரியத் திடம் தெரி விக்கத் தவறி விட்ட குற்றச்சாட்டை ஜொகூர் பாரு முன்னாள் எம்.பி.யான ஷாரிர் எதிர்நோக்கி யுள்ளார்.

நேற்றைய விசாரணையின் போது, 21ஆவது அரசுதரப்பு சாட்சியான ஐ.ஆர்.பி. மதிப்பீட்டு பிரிவின் துணைத்தலைவர் துவான் ஸுல்கிப்ளி துவான் லா தொடர்ந்து சாட்சியமளித்தார்.


VACANCY
MALAYSIA NANBAN
HQ OFFICE, JALAN IPOH, KL

ADVERTISEMENT CLERK
(AGE REQUIREMENTS : 20-40 years old)
WORKING TIME : 10.00am to 6.00pm

RECEPTIONIST
(AGE REQUIREMENTS : 18-40 years old)
WORKING TIME : 1.00pm to 9.00pm

CONTACT :
03-6251 5981
03-6250 1459
hrnanban@gmail.com

FC00100/14/12/22





AG11532/14/12/22




AG11531/14/12/22